11.09.2023
அசல் வழக்கு எண்: 486/2013

பி.வா.சா.1 சாட்சி பரமேஸ்வரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்து பொது நடைபாதை என்றால் சரியல்ல. தாவா வழக்கு விபரம் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கானது பட்டுநூல்காரன் பேட்டை தெரு சம்பந்தமாகத்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டுநூல்காரன் பேட்டை தெரு என்பது விருதுநகர் பிரதானசாலையில் இருந்து கிழக்காக இரயில்வே லைன் வரை செல்கிறது என்றால் சரியல்ல.

பட்டுநூல்காரன் பேட்டை தெருவிற்கு வடக்கேதான் எங்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தான பட்டுநூல்காரன் பேட்டை தெரு சர்வே எண். 153 ல் கட்டுப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. எனது வீட்டிற்கும் இடத்தின் சர்வே எண். 136 என்றால் ஞாபகம் இல்லை. எனது வீட்டை காட்டகூடிய டவுண் சர்வே வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. எனது வீட்டிற்கு பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. புலவரைபடத்திலும், பட்டாவிலும் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் காட்டப்பட்டிருக்கும் என்றால் பத்திரப்படி நாங்கள் கேட்கிறோம். பத்திரத்தில் உள்ள அளவிலும், வரைபடத்திலுள்ள அளவிலும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். தற்போது வாதி தரப்பில் தவறாக அளவீடு செய்யப்பட்டுள்ளது.

சேதுராமன் என்ற பாண்டி என்பவர் என்மீது தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 131/2000 என்ற வழக்கு எனது வீட்டிற்கும் சேதுராமன் என்ற பாண்டி என்பவருடைய வீட்டிற்கும் இடையேயுள்ள பாதையை

பொறுத்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். இருவரது கிரைய ஆவணங்களிலும் தலா 3 1/2 அடி பாதைக்காக விடவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றாலும் அதன் அடிப்படையில் தான் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். மேற்படி தீர்ப்பு படி இருவரும் அவரவர் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பொதுபாதையாக பயன்படுத்திகொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நாங்கள் 3 1/2 அடியில் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. இடத்தை விட்டுவிட்டுதான் வீடு கட்டியுள்ளோம்.

2000ம் ஆண்டு கால கட்டத்திலேயே பட்டுநூல்காரன் பேட்டை தெரு 10 அடி அகலம்கொண்ட பாதை என்று வருவாய் பதிவேடுகளில் இருந்தது என்றாலும் அதன் அடிப்படையில் அளப்பதற்காகவும், ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காகவும் அனைவருக்கும் நோட்டிஸ் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு யாரும் நோட்டிஸ் கொடுக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 3 வது பக்கத்தில் 10 அடி அகல பாதை அமைக்க நான் கிரையம் பெற்ற இடத்தில் மேலும் இடம் வேண்டும் என்று கேட்டார்கள் நான் அதற்கு மறுத்துவிட்டேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 10 அடி அகல பாதை உள்ளது என்பதை ஆட்சேபணை செய்து நான் வட்டாட்சியரிடம் கேட்டுக்கொண்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

சர்வே எண். 153ல் கட்டுப்பட்ட பட்டுநூல்காரன் பேட்டை தெரு ஆரம்பத்திலிருந்து 10 அடி அகல பாதை என்றும் அதனை நான் ஏற்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அசல் வழக்கு எண். 96/2002 என்ற வழக்கை சேதுராமன் என்ற பாண்டி மற்றும் நகராட்சி மீதும் தாக்கல்

செய்தேன் என்றால் சரிதான். சேதுராமன் என்ற பாண்டி தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 131/2000 வழக்கிலும், நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 96/2002 வழக்கிலும் இந்த வழக்கின் வாதி காளியப்பன் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 96/2002 வழக்கில் கண்ட சொத்து நான் கிரையம் பெற்ற பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் கண்ட சொத்து என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 96/2002ல் கண்ட சொத்து விபரத்தில் தெற்குமாலாக 7அடி அகலம் கொண்ட பாதை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கில் பாதையானது 7அடி பாதைதான் என்று விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். பட்டுநூல்காரன் பேட்டை தெரு என்பது அந்த இடத்தில் வசிக்ககூடிய மக்கள் பயன்படுத்தகூடிய பொதுவான பாதை என்றால் சரிதான். 10 அடி பாதையாக அகல படுத்தினால் பொது மக்களுக்கு பயன்பெறும் என்றால் சரியல்ல.

முத்தாலம்மன் கோயில் தெருதான் எங்களுக்கு கட்டுப்பட்ட தெரு என்று காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது பத்திரத்தில் முத்தாலம்மன் கோயிலவ் தெருதான் குறிப்பிட்டுள்ளது. பட்டுநூல்காரன் பேட்டை தெரு என்பது 10 அடி அகலம் உள்ள பாதை என்றாலும் அதில் ஆக்கிரமிப்பு செய்ய எனக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. டவுண் சர்வே வரைபடம் படி 10 அடி பாதை என்று உள்ளது என்றாலும் அதற்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளேன் என்றாலும் நடவடிக்கை எடுத்துள்ளேன். பட்டா மற்றும் டவுண் சர்வே வரைபடத்தை என்னால் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். பட்டா மற்றும் டவுண் சர்வே வரைபடத்தை தாக்கல் செய்தால் எங்களுடைய வீட்டின் அளவு

தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

(2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).